**தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தும் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஒழுங்குபடுத்தும் சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒழுங்குபடுத்தும் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- எவ்வாறான போதிலும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான நிலவுகை நிறைவடையக்கூடும்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஒழுங்குபடுத்தும் சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்குகள் சமப்படாத காரணத்தால் உருவாகி இருந்த ரூபாய்.232,400 ஆன தொங்கல் மீதி இனங்காணப்பட்டு உரிய சீராகங்கள் மேற்கொள்வதற்கு பதிலாக நிதியங்கள் மாற்ற கணக்கில் மீதி ஒன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றமை. | தவறினை திருத்தி அதற்கடுத்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நடைமுறைச் சொத்துக்களில் ரூபா 44,635,902 மறைப் பெறுமதியாக காணப்பட்டமையால் ஒழுங்குபடுத்தும் சபையின் குறுங்கால ஏற்ற இறக்கம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2017 ஆம் ஆண்டு முதல் ஒழுங்குபடுத்தும் சபை தொடர்ச்சியாக நட்டத்தை பெற்றமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 33,719,154 திரண்ட நிதியம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 8,867,199 வரை 74 சதவீதத்தால் படிப்படியாக குறைவடைந்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றமை. | நாட்டில் செயல்படுகின்ற சகல தனியார் மருத்துவ நிறுவனங்களையும் பதிவு செய்து வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும், நிறுவனத்தின் செலவினங்களை குறைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்து குறுங்கால ஏற்ற இறக்கத்தை தவிர்ப்பதற்கும், நட்டமடைவதை குறைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒழுங்குபடுத்தும் சபையினால் சேகரிக்கப்படுகின்ற வருடாந்த பதிவுக் கட்டண வருமானத்தில் 50 சதவீதமான தொகையில் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட வேண்டிய மீதி ரூபா 41,880,735 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய தொகை ரூபா 10,697,000 தொகையுடன் செலுத்த வேண்டிய மொத்த தொகையான ரூபா 52,577,735 மீளாய்வாண்டினுள் ரூபா 8,059,678 தொகை அல்லது 15 சதவீதத்தினை மாத்திரம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றமை. | இது தொடர்பாக சட்டத்தில் காண்பிக்கப் படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட செயற்பாட்டு கையேடு | | | |
| (i) 3.1 ஆம் பந்தி | பதவியணிக்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஒழுங்குபடுத்தல் சபையினால் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றமை. | செயற்பாட்டு கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (ii) | 6.6 ஆம் பந்தி | கணக்காய்வு அறிக்கையுடன் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்ட ஆண்டறிக்கை நிதியாண்டு நிறைவடைந்த பின்னர் 05 மாதங்களினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஒழுங்குபடுத்தல் சபையினால் 2021 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை 2023 மார்ச் 25 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படபடவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றமை. | செயற்பாட்டு கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (iii) | 7.5 ஆம் பந்தி | மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் வரிசை அமைச்சிற்கும் பொதுத் திறைசேரிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறு இடம் பெற்றிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றமை. | மேற்படி |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் கோவை | | | | |
| | (i) | 2.3 ஆம் பந்தி | மூலோபாய திட்டம் ஒன்று, செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு கட்டுப்பாட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் அவை வரிசை அமைச்சின் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றமை. | வழிகாட்டு கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயலாளரின் ஊடாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2022 டிசம்பர் 21 ஆம் திகதிய ped 09/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கடந்த நிதியாண்டினுள் நட்ட நிலைமையொன்று அறிக்கையிடப்பட்டிருந்த நிறுவனம் ஒன்றின் ஊழியர்களுக்கு மீளாய்வாண்டினுள் ஊக்குவிப்பு படிகளாக செலுத்த முடியாத போதிலும் ரூபாய்.424,100 ஆன ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | மேற்படி | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு புறம்பாக செயல்பட்ட பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2017 ஏப்ரல் 19ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | அனைத்து அரச நிறுவனங்களினதும் கைவிரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் அரச உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்திற்கு வருகைதரல் மற்றும் வெளிச்சொல்லலை சான்று படுத்தல் தொடர்பிலான அறிக்கை இடப்பட வேண்டியமையால் 2020 ஜுலை 24 ஆம் திகதி ரூபாய்.57,240 செலவிடப்பட்டு கைவிரல் அடையாள இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அது 2022 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. கடந்த வருடத்திலும் இந்த விடயங்கள் சுட்டி | மேற்படி | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காண்பிக்கப்பட்ட போதிலும் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்கள் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2 ஆம் பந்தி | நிறுவனம் ஒன்றினால் பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியத்துடன் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்கு உத்தேச பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகைகள் திட்டத்தில் பட்டியல் படுத்தப்பட வேண்டிய போதிலும் ஒழுங்குபடுத்தல் சபையினால் மீளாய்வாண்டிற்காக மாத்திரம் பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,372,457 ஆன நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 692,194 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,680,263 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பதிவு வருமானம் குறைவடைந்தமை மற்றும் நிர்வாகச் செலவினம் அதிகரித்தமை ஆகியன பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒழுங்குபடுத்தல் சபையினால் சேகரிக்கப்படும் வருடாந்த பதிவு கட்டண வருமானத்தில் ஐந்து சதவீதம் மாகாண தலைமைச் செயலாளருக்கு வழங்குவதற்கு முன்னர் மாகாண சுகாதார | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றமை. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வழங்கப்பட்டுள்ள அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கமை |

| | | | |
|---|---|---|---|
| | சேவைகள் பணிப்பாளரினால் தனியார் சுகாதாரப் பிரிவுகள் அபிவிருத்திக்குரிய வருடாந்த பாதீட்டுடன் வருடாந்த முன்மொழிவு ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது மற்றும் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான செலவினை மற்றும் பணிகள் தொடர்பிலும் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனும் ஏற்பாட்டினை உள்ளடக்கி 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் அதிகார சட்டத்தின் 3(5) பிரிவினை திருத்துவதற்கு 2015 ஜூலை 09 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்று 07 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதிகாரச் சட்டம் திருத்தப்பட்டிராததுடன் வருடாந்த பதிவு கட்டண வருமானத்தில் 50 சதவீதமான தொகையில் ஒரு பகுதி மாத்திரம் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. | | மய துரிதமாக அதிகரிச்சட்டத்தின் பிரிவுகள் திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண சபைகளின் செலவினங்களை மேற்கொள்வதற்கு எந்த ஒரு ஏற்பாடும் அதிகார சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிராததுடன் மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இணைப்பு செய்யப்பட்டு சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் தொலைபேசி கொடுப்பனவுகள், போக்குவரத்துச் செலவினம் | மேற்படி | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் சம்பளமாக மீளாய்வாண்டினுள் ரூபாய்.1,397,040 ஒழுங்குபடுத்தல் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. மேற்படி அதிகாரச்சட்டத்தின் 3(5) பிரிவிற்கமைய மேல் மாகாண சபைக்கு செலுத்த வேண்டிய பதிவுக் கட்டண வருமானத்தில் அந்த தொகை கழிக்கப்பட்டு இருந்தது. | | |

**3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களின் ஊடாக மாகாணத்தினுள் அமைந்துள்ள தனியார் சுகாதார நிறுவனங்கள் தொடர்பில் புள்ளிவிபர திரட்டல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு தகவல்களை சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய 2023 மார்ச் 25 ஆம் திகதி வரையிலும் 315 சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு உரிய தகவல்கள் கிடைத்திருந்ததுடன் 46 சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய ஒழுங்குபடுத்தல் சபையினால் இனங்காணப்பட்டிருந்த தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை 6002 ஆன போதிலும் மீளாய்வாண்டில் பதிவு செய்திருந்தது அவற்றுள் 1208 நிறுவனங்கள் மாத்திரம் ஆகும். இதற்கமைய | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றமை. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அனைத்து தனியார் சுகாதார நிறுவனங்களும் பதிவு செய்ய வேண்டியமையால் அதற்கமைய நடவடிக்கை எடுக்காது தனியார் சுகாதார நிறுவனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்தல் தொடர்பான பொறுப்பு ஒழுங்குபடுத்தும் சபையினால் புறக்கணிக்கப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | ஒழுங்குபடுத்தும் சபைக்கு சாட்டப்பட்டுள்ள பொறுப்பின் நிறைவேற்றல் மிகவும் நலிவான மட்டத்தில் நிலவியது. | | |
| (ஆ) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் அதிகாரச் சட்டத்தின் 2(1) உபபிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் பதிவு செய்ய வேண்டிய தனியார் மருத்துவ நிறுவனங்களை இனங்காணுவதற்கு, பதிவு செய்வதற்கு மற்றும் பதிவு செய்யாத நிறுவனங்கள் தொடர்பில் அதிகார சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய செயப்படுவதற்கு முறையான நடைமுறையொன்று ஒழுங்குபடுத்தும் சபையினால் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றமை. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மேற்படி அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய பதிவு செய்த தனியார் மருத்துவ நிறுவனங்களினால் பேணிச் செல்லப்பட வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்வதற்கு மற்றும் கண்காணிப்பதற்கு, தற்போது பேணிசெல்லப்படும் நியமங்களை மதிப்பீடு செய்யும் நடைமுறை ஒன்றினை செயல்படுத்துவதற்கு, ஆளணி ஆட்சேர்ப்பதற்கு ஆகக் குறைந்த தகைமைகள் பின்பற்றப்படுகின்றமையை சான்றுபடுத்துவதற்கு மற்றும் மனிதவள பயிற்சி ஆகியவற்றின் போது ஆகக் குறைந்த நியமங்கள் பின்பற்றப்படுகின்றது என்பதற்கு பொறுப்பு கூறுவதற்கு மற்றும் வழங்கப்படும் நோயாளர் பராமரிப்பு சேவைகளின் தரத்தினை உறுதிப்படுத்தல் மற்றும் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றமை. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிகளை நிறைவேற்றுவதற்கு முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு செயல்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது. | | |
| (ஈ) | மேற்படி அதிகார சட்டத்தின் 13(1) பிரிவிற்கமைய சபையின் அறிவுரைகளுக்கு அமைய வர்த்தமானியில் வெளியிடப்படும் விதிகள் மூலம் அமைச்சரால் தனியார் மருத்துவ நிறுவனங்களை அங்கீகரிக்கும் முன்மொழிவு நடைமுறையொன்று முறையாக குறிப்பிடப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| (உ) | மேற்படி அதிகாரச் சட்டத்தின் 18(2) உாபிரிவின் (எ) பந்திக்கமைய தொடர்புடைய அல்லது அதிருப்தி அடைந்த நபர் ஒருவரினால் ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனம் ஒன்றிற்கு அல்லது அதனுடன் தொடர்புடைய நபருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஏதேனும் ஒரு முறைப்பாட்டினை பொறுப்பேற்கும் போது மற்றும் அம் முறைப்பாட்டை உரிய முறையில் அகற்றும் போது பின்பற்றப்பட வேண்டிய செயல் நடைமுறைகள் அல்லது நடவடிக்கைகள் தொடர்பில் கட்டளைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| (ஊ) | 2017 ஜூன் 25 ஆம் திகதிய சுகாதார போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 17/1366/718/084 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கமைய இலங்கை தேசிய சுகாதார கொள்கை 2016 - 2025 மற்றும் அதற்குரிய முதன்மை சுகாதார | | |

திட்டம் (2016 - 2025) (Health Master Plan) ஜனாதிபதியின் பரிந்துரைகளுடன் 2017 ஜூன் 18 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இந்த முதன்மை சுகாதார திட்டத்தில் நிவாரண சேவைகள் (Curative Service) பிரிவில் 2.8 ஆம் இலக்க (Thematic Area) பிரிவின் ஒழுங்குபடுத்தப்படாத தனியார் சுகாதார பிரிவு தொடர்பில் இனங்காணப்பட்ட உத்தேச மூலோபாயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

அவ்வாறே இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தின் துறைசார் கண்காணிப்புக் குழுவின் (அரசியலமைப்பின் 43 மற்றும் 44 ஆம் உறுப்புரைகள்) அறிவுரைகளுக்கு அமைய அச்சிடப்பட்டிருந்த இந்த தேசிய சுகாதார மூலோபாய ஒட்டுமொத்த அபிவிருத்தி திட்டத்தின் பகுதி ii இல் நிவாரண சேவைகள் (Curative Service) பிரிவில் தனியார் சுகாதார பிரிவின் கண்காணிப்பு அபிவிருத்தி மற்றும் வலுவூட்டல் எனும் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு

"சுகாதார சேவைகள் பணிப்பாளர் சபையின் தலைவராக காணப்படுவதாகவும் தனியார் மருத்துவத் துறை அபிவிருத்தி பணிப்பாளர் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் செயலாளராகவும், இலங்கை மருத்துவ சபையின் பதிவாளருடன் 09 மாகாணங்களில் சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் உத்தியோகபூர்வ அதிகாரத்திற்கு நியமிக்கப்படுவதாகவும் தனியார் ஆரோக்கிய சாலைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள்

மற்றும் பிணியாய்வு நிலையச் சங்கத்தின் 09 பிரதிநிதிகள் உள்ளடங்களாக 16 பேர் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றமையால் உத்தியோகபூர்வ அதிகாரத்தினால் நியமிக்கப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை விட அமைச்சரினால் நியமிக்கப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையினால் இந்த சபையின் பிரமாண குறிப்பு சவாலுக்கு உள்ளாகியுள்ளமை'' குறிப்பிடப்பட்டிருந்தது.

அவ்வாறே ''தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் இயந்திரப் பொறிமுறையினுள் மற்றும் ஒழுங்குபடுத்தும் சபையில் சபையினுள் தனியார் பிணியாய்வுகளை வழங்குபவர்கள் உள்ளடங்குதல் சிறந்த நடைமுறைகளுக்கு எதிரான நிலைமையொன்றாவதுடன் இது இலங்கையினை போன்றே தென்கிழக்கு ஆசிய வலையத்திற்கு உரித்தான / தனித்துவமான நிலைமை என்பதும் தற்போதைய ஒழுங்குபடுத்தல் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்தல் உரிய முறையில் இடம்பெறுகின்றதா என்பது சவாலுக்கு உள்ளாகியுள்ள விடயம் என்பதும் மற்றைய மறுபக்கம் நோக்கினால் சபையின் கட்டமைப்பினுள் தனியார் சுகாதார சேவைக்கு குரல் எழுப்புவதற்கு போன்றே தீர்மானம் எடுக்கும் நடைமுறைக்கும் இது தாக்கம் அளித்துள்ளதாகவும் இதனால் அமைச்சரினால் பிரமாணங்களுக்கு அதிக அதிகாரம் மற்றும் சுயாதீனத்துவம் காணப்பட வேண்டிய தேவைப்பாடு இனங்காணப்பட்டு அதிக

அதிகாரங்களுடனான அங்கத்தவர்களை உள்ளடக்குதல் போன்றே ‘‘அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள்’’ மிகவும் திட்டவட்டமாக வரைவிலக்கணப்படுத்துவதற்கு 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் அதிகார சட்டத்தினை திருத்தி அமைக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2023 ஆம் ஆண்டு வரையிலும் தேசிய சுகாதார மூலோபாய ஒட்டுமொத்த அபிவிருத்தி திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி சிக்கல்களை குறைப்பதற்கு அல்லது உரிய வேறுபாடுகளுடன் அதிகாரச் சட்டத்தினை திருத்துவதற்கு பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் சபையின் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் தீர்மானம் எடுத்தல், உபகுழுக்களை நிர்மாணித்தல் அந்த உபக்குழுக்களின் கூட்டங்கள் மற்றும் தீர்மானங்களை எடுத்தல் போன்ற பணிகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச மூலோபாயங்களின் ஊடாக அடைய முடியாது உள்ளதாகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு அமைய உறுதிப்படுத்தப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (i) | நாட்டினுள் தனியார் மருத்துவ நிறுவனங்கள் பெருமளவில் நடாத்திச் செல்லப்படும் மருத்துவ தொழில் சார்ந்தவர்களினை கொண்டமைந்த 03 தொழிற்சங்கங்களை | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) அதிகாரச் சட்டத்திற்கு அமைய சபைக்குள்ள அதிகாரங்களுக்கு அமைய நடவடிக்கை | அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும் பொது சுகாதார திட்டம் (2016 – 2025) குறிப்பிடப்பட்டுள்ள வாறு மக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பிரதிநிதித்துவப்படுத்தி 03 பேர் மற்றும் தனியார் மருத்துவமனைகள் மற்றும் பிணியாய்வு நிலையச் சங்கத்தின் அங்கத்தவர்களிடையே 09 பேர் உள்ளடங்களாக ஒழுங்குபடுத்தும் சபையின் 28 அங்கத்தவர்களில் 16 பேர் அல்லது மொத்த அங்கத்தவர்களின் 57 பேர் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்டமை மற்றும் ஒழுங்குபடுத்தும் சபையின் கூட்டமொன்றின் ஆகக் குறைந்த எண்ணிக்கை 07 பேர் என்பதாக காணப்படுகின்றமையால் 16 அங்கத்தவர்களின் 07 பேர் ஒன்றிணைந்து சபை கூட்டத்தை நடத்துவதற்கு தீர்மானம் எடுப்பதற்கு இயலுமை காணப்படுகின்றமை மற்றும் ஒழுங்குபடுத்தும் சபையின் விதிகளுக்கு உள்ளாகும் தனியார் சுகாதார நிறுவனங்களின் உரிமையாளர்கள் ஒழுங்குபடுத்தும் சபையின் அங்கத்தவர்கள் ஆகக்காணப்பட்டமையால் அவர்களுடனான தொடர்பு பற்றிய முரண்பாடு ஒன்று (conflict of interest) காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்பட்டுள்ளமை. | நலனுக்காக தீர்மானம் எடுக்கும் இயலுமையுடைய உள்ளடக்கத்துடன் கட்டுப்பாட்டுச் சபை ஒன்று நியமிக்கப்பட கூடிய வகையில் 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) அதிகார சட்டத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | அதிகாரத்தினால் நியமிக்கப்படும் அங்கத்தவர்கள் கூட்டத் தடவைகளுக்கு பங்கு பற்றும் போக்கில் குறைவொன்றும் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | அங்கத்தவர்களின் பங்குபற்றலானது உயர்ந்த சதவீதத்தினை கொண்டிருந்தமையாலும் சபையின் நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் போது அதிக தாக்கத்தினை அந்த அங்கத்தவர்களுக்கு செலுத்த இயலும் என்பது அவதானிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் நடாத்தப்பட்டிருந்த 43 கூட்ட தடவைகளில் 23 (53 சதவீதம்) அமைச்சரினால் நியமிக்கப்படும் அங்கத்தவர்களின் பங்கு பற்றலானது 50 சதவீதம் முதல் 73 சதவீதம் வரை காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் ஒழுங்குபடுத்தல் சபையினால் நடாத்தப்பட்டிருந்த மொத்த கூட்டங்களின் எண்ணிக்கை 43 இல் 08 கூட்ட தடவைகளில் தலைவர் பதவி தனியார் மருத்துவமனைகள் மற்றும் பிணியாய்வு நிலையங்கள் சங்கத்தின் அங்கத்தவர்களால் நிரப்பப்பட்டிருந்ததுடன் இந்த நிலைமையில் தனியார் சுகாதார சேவைகள் தொடர்பில் சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் பக்க சார்பற்ற வகையில் மக்களின் நலனை | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | முன்னுரிமையாக கொள்ளும் வகையில் எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. | | |
| (iv) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) அதிகாரச்சட்டத்தின் கட்டுப்பாட்டு சபை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய கால எல்லை மற்றும் தடவைகளின் எண்ணிக்கை தொடர்பிலான விதிகள் குறிப்பிடப்பட்டிராமையால் 2018 முதல் 2022 வரையிலான அங்கத்தவர்களின் சுயவிருப்பின் அடிப்படையில் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. | மேற்படி | இது தொடர்பில் ஏற்பாடுகளை உள்ளடக்கி அதிகார சட்டத்தினை துரிதமாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | ஒழுங்குபடுத்தும் சபையின் தலைவர் 2018 ஆம் ஆண்டில் நடாத்தி இருந்த 10 கூட்டத் தடவைகளில் 03 இற்காகவும் 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்த 09 கூட்ட தடவைகளில் 03 கூட்டங்களுக்கு மாத்திரம் பங்கு பற்றியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்த 05 கூட்டங்களுக்கும் பங்கு பற்றியிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்த 08 கூட்ட தடவைகளில் 05 இற்காகவும் 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டு இருந்த 11 கூட்டத் தடவைகளில் 06 இற்காகவும் மாத்திரம் | மேற்படி | கூட்டங்களுக்காக அதிகாரத்தினால் நியமிக்கப்படும் அங்கத்தவர்களின் பங்களிப்பு நிச்சயமாக அதிகரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்கு பற்றியிருந்தார். | | |
| (vi) | இலங்கை மருத்துவ சபையின் பதிவாளர் 2018 ஆம் ஆண்டில் நடாத்தி இருந்த 10 கூட்டத் தடவைகளில் 04 கூட்ட தடவைகளுக்காகவும் 2019 ஆம் ஆண்டில் நடத்தி இருந்த 09 கூட்டங்களுக்காகவும் பங்கு பற்றி இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் நடாத்தி இருந்த 05 கூட்டத் தடவைகளில் 03 கூட்ட தடவைகளுக்கும் 2021 ஆம் ஆண்டில் நடாத்தி இருந்த 08 கூட்ட தடவைகளில் 04 இற்காகவும் பங்கு பற்றி இருந்தார். அவ்வாறே 2022 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டிருந்த 11 கூட்டத் தடவைகளில் 03 கூட்ட தடவைகள் இவ்வாறு குறைந்த அளவிலான எண்ணிக்கையிலான பங்களிப்பினை கொண்டிருந்தார். | மேற்படி | மேற்படி |
| (vii) | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் ஒன்பது பேர் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் நடாத்திய ஒழுங்குபடுத்தும் சபை கூட்டங்களுக்கான பங்களிப்பானது கருத்திற் கொள்ளக்கூடிய அளவில் காணப்படவில்லை. | மேற்படி | மேற்படி |
| (viii) | அமைச்சரால் நியமிக்கப்பட்ட சுதந்திர மருத்துவ துறை சார் தொழில் புரிவோரின் சங்கம்,இலங்கை பல் மருத்துவ சங்கம் மற்றும் மருத்துவ தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் சங்கம் ஆகிய மூன்று சங்கத்தவர்களின் | மேற்படி | கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் பங்குபற்றலினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதிநிதிகளின் கடந்த 05 வருடங்களில் கூட்டங்களுக்கு பங்கு பெற்றும் சதவீதம் தொடர்பில் பரிசோதித்த போது சுதந்திர மருத்துவ தொழில் ஈடுபட்டுள்ளோரின் சங்கம் மற்றும் இலங்கை பல் மருத்துவ சங்கத்தின் 60 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதம் வெளிப்படுத்தப்படுகின்ற போதிலும் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் சங்கத்தின் 25 சதவீதம் முதல் 56 சதவீதம் வரையான பங்குபற்றலே அவதானிக்கப்பட்டது. | | |
| (ix) | கணக்காளர் துறையின் பிரதிநிதி கடந்த ஐந்து வருடங்களில் சபை கூட்டங்களில் பங்கு பற்றிய சதவீதம் 38 சதவீதத்திலிருந்து 73 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்படுகின்றதாகவும் முகாமைத்துவ துறையின் பிரதிநிதியின் பங்குப்பற்றல் பூச்சியத்திலிருந்து 40 சதவீதம் வரையிலான குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமையும் சட்டத்துறையின் பிரதிநிதியின் 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் எந்தவித கூட்டங்களுக்கும் பங்கு பற்றி இராததுடன் எஞ்சிய 03 வருடங்களில் 18 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையிலான பங்களிப்பு காண்பிக்கப்பட்டுள்ளதாக வும் தாதியர் துறையின் பிரதிநிதி 2018 முதல் 2021 வரை 20 சதவீதம் | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 63 சதவீதம் வரையான பங்களிப்பு அவதானிக்கப்பட்டது. | | |
| (x) | தனியார் மருத்துவமனைகள் மற்றும் பிணியாய்வு நிலையங்கள் சங்கத்தின் 09 பிரதிநிதிகளில் 07 அங்கத்தவர்கள் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை நடாத்திய கூட்டம் 43 கூட்ட தடவைகளுக்கு பங்கு பற்றிய சராசரி 42 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அவற்றுள் ஒரு அங்கத்தவர் 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 10 கூட்டத் தடவைகளில் 06 கூட்டத் தடவைகளுக்கு மாத்திரம் பங்கு பற்றி இருந்ததுடன் ஒரு அங்கத்தவர் மாத்திரம் இந்த 05 வருடங்களில் நடாத்தப்பட்ட அனைத்து கூட்டங்களிலும் பங்கு பற்றி இருந்தார். 2021 ஆம் ஆண்டினுள் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் பதிவினை பெற்றிருந்த தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை 131 ஆன போதிலும் கட்டுப்பாட்டு சபைக்கு அங்கத்தவர்களை நியமிக்கும் போது தொடர்ச்சியாக சில மருத்துவமனைகள் மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 09 அங்கத்தவர்களின் இரு அங்கத்தவர்களும் | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | ஒரே மருத்துவமனையை பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்டிருந்தனர். | | |
| (xi) | அதிகாரச் சட்டத்தின் 6(4) பிரிவிற்கமைய நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமாக சபையினால் கருதப்படின் எந்தவித காரணமும் இல்லாதது சபையின் மூன்று கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக வருகை தராதுவிடின் அந்த அங்கத்தவர் பதவியினை கைவிட்டு சென்றவராக கருதப்படுவார் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தொடர்ச்சியாக மூன்று தடவைகளுக்கு மேற்பட்ட கூட்டங்களில் பங்கு பற்றி இராத அங்கத்தவர்கள் தொடர்பில் இதற்குமேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | அதிகார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (xii) | 2007 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டு இருந்த தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபைக்கு 2022 ஆம் ஆண்டு வரையிலான 15 வருட காலப்பகுதியினுள் 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனம் (பதிவு செய்யும்) அதிகார சட்டத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமைக்கு மேற்படி விடயங்கள் நேரடியாக தாக்கம் அளித்து இருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகக் குறைந்தது 2007 ஆம் ஆண்டில் | மேற்படி | அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த முதன்மை சுகாதார திட்டம் (2016 – 2025) இல் குறிப்பிடப்பட்டுள்ள வாறு மக்கள் நலனை முன்னிறுத்தி தீர்மானம் எடுக்கும் இயலுமையுடன் கூடிய உள்ளடக்கத்தினை கொண்ட கட்டுப்பாட்டு சபை ஒன்றினை நியமிக்க கூடிய வகையில் 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் பதிவு செய்யும் அதிகாரச் |

| | | |
|---|---|---|
| தீர்மானிக்கப்பட்டிருந்த பதிவு கட்டணங்களை 15 வருடங்களில் திருத்தி அமைப்பதற்கேனும் ஒழுங்குபடுத்தும் சபையினால் முடியாதிருந்தது. | | சட்டத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) அதிகார சட்டத்தின் 11 ஆம் பிரிவிற்கமைய பதிவு விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும் குழு, அலுவலக முகாமைத்துவ குழு, பயிற்றுவிப்புக் குழு, கட்டணங்களை அறவிடும் குழு, முறைப்பாடுகளை விசாரிக்கும் குழு, தரப்படுத்தும் குழு, வழிகாட்டல்கள் தொடர்பிலான குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பிலான குழு எனுமாறு 08 உப குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. இந்த உப குழுக்களை நியமித்தல் மற்றும் அவற்றின் செயற்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) 2022 டிசம்பர் மாதம் அளவில் ஒழுங்குபடுத்தும் சபையின் 08 உபகுழுக்ககுக்காக நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களின் தனியார் மருத்துவமனைகள் மற்றும் பிணியாய்வு நிலையங்கள் சங்கத்தின் பிரதிநிதிகளின் சதவீதம் 22 முதல் 60 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டமையால் இந்த உப குழுக்களில் இருந்து எதிர்பார்த்த நோக்கங்களை | மேற்படி | அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த முதன்மை சுகாதார திட்டம் (2016 – 2025) இல் குறிப்பிடப்பட்டிருந்தவாறு மக்களின் நலனுக்காக தீர்மானம் எடுக்கும் இயலுமையுடன் உள்ளடக்கத்துடனான கட்டுப்பாட்டு சபையொன்று நியமிக்க இயலுமான வகையில் 2006 |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றுவதில் பக்கச் சார்பின்மை தொடர்பில் வெளிப்படைத்தன்மை கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. | | இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) அதிகாரச்சட்டத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உப குழுக்களை நியமிக்கும் போது பக்க சார்பின்றி சுயாதீனமான தீர்மானம் எடுக்கும் இயலுமையுடனான உள்ளடக்கத்துடன் குழு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | உபகுழுக்களுக்காக முகவர்களை பிரதி நிதிகளை நியமிக்கும் போது தனியார் மருத்துவமனைகள் மற்றும் பிணியாய்வு நிலையங்கள் சங்கத்தின் 09 அங்கத்தவர்களில் ஒரு அங்கத்தவர் 08 உப குழுக்களுக்காகவும் நியமிக்கப்பட்டிருந்ததுடன் சில பிரதிநிதிகள் அதிக எண்ணிக்கையிலான நியமிக்கப்பட்டிருந்தனர். | மேற்படி | மேற்படி |
| (iii) | ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபைக்காக அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் மற்றும் பிணியாய்வு நிலையங்கள் சங்கத்தின் 09 அங்கத்தவர்கள் உள்ளடங்களாக குறித்த 08 உப குழுக்களுக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளின் பிரதிநிதித்துவம் 56 சதவீதம் முதல் 88 | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் இற்கு இடைப்பட்ட அளவில் காணப்படுகின்றமையால் இந்த குழுக்களின் ஊடாக எடுக்கப்பட்ட / எடுக்கப்படும் தீர்மானங்களின் பக்க சார்பற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது மற்றும் இவ்வாறானதொரு உள்ளடக்கத்துடனான உப குழுக்களினால் எடுக்கப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் பொதுமக்களுக்கு சிறந்த சேவை ஒன்று வழங்கப்படும் வகையில் மற்றும் பொதுமக்களுக்கு நியாயம் நிறைவேற்றப்படும் விதம் நாட்டினுள் செயல்படும் தனியார் சுகாதார நிறுவனங்களை ஒழுங்குபடுத்த முடியுமா என்பது சர்ச்சைக்குரியதாக காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (iv) | பதிவு செய்த விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும் குழுவிற்கு 09 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் பதிவிற்காக கிடைக்கும் விண்ணப்பங்கள் உரிய சட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ளதா என்பதை மதிப்பீடு செய்வதற்கும் பதிவினை வழங்க முடியாத சட்ட பின்புலம் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு சட்டத்துறையின் பிரதிநிதியாக கட்டுப்பாட்டு சபையில் இருந்த போதிலும் அவர் இந்த உப குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | கட்டுப்பாட்டு சபையில் உள்ள ஒவ்வொரு துறைகளுக்கும் நிபுணர்கள் உரிய உப குழுக்களுக்கு நியமிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | அலுவலக முகாமைத்துவ குழுவிற்கு 10 அங்கத்தவர்களை நியமித்திருந்ததுடன் நிதித்துறை தொடர்பிலான சிக்கல்கள் எழும் சந்தர்ப்பங்களில் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு நிதி பிரிவின் பிரதிநிதி ஒருவர் கட்டுப்பாட்டு சபையினை பிரதிநிதித்துவம் செய்த போதிலும் அவர் இந்த உப குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டிராததுடன் இந்த உப குழுவின் 10 அங்கத்தவர்களில் 05 பேர் தனியார் மருத்துவமனைகள் மற்றும் பிணியாய்வு நிலையங்கள் சங்கத்தின் பிரதிநிதிகளாவதுடன் இந்த 05 அங்கத்தவர்கள் உள்ளடங்களாக 08 அங்கத்தவர்கள் கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் ஆவர். அலுவலக நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கான இவ்வாறான உள்ளடக்கத்துடனான உப குழு ஒன்று நியமிக்கப்படுவதன் ஊடாக அலுவலக நடவடிக்கைகளின் சுயாதீனத்துவம் மற்றும் தனியார் சுகாதார நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தலுக்கு உத்தியோகத்தர்களின் தீர்மானம் எடுத்தல் என்பவற்றின் மீது பாதகமான முறையில் தாக்கமளிக்க கூடும் என்பது | மேற்படி | கட்டுப்பாட்டுச் சபையில் உள்ள ஒவ்வொரு துறைகளுக்கும் உரிய நிபுணர்கள் ஒவ்வொரு உப குழுக்களுக்காக நியமிக்கப்பட வேண்டியதுடன் தனியார் சுகாதார நிறுவனங்களின் உரிமையாளர்கள் உப குழுக்களின் அங்கத்தவர்களான மையை காரணமாக கொண்டு ஏற்பட்டுள்ள தொடர்பிலான முரண்பாடு (conflict of interest) ஏற்படாத விதத்தில் அந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. நிறுவனத்தின் பதவியணி தனியார் மருத்துவமனைகளின் கண்காணிப்பு தொடர்பில் தீர்மானம் எடுத்தல் அல்லது ஒழுங்குபடுத்தல் தொடர்பில் நிலவும் சட்டங்கள், விதிகள் அல்லது பிரமாணங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பின் பதவியணிக்கு தாக்கம் அளிக்கும் விடயங்கள் இந்த உப குழுக்களில் கலந்துரையாடப்படும் போது அவர்களுக்கு தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் அல்லது அவர்களுக்கு பாதகம் ஏற்படும் வகையில் அல்லது அவர்களுக்கு பக்க சார்பான வகையில் தீர்மானம் எடுக்கும் இயலுமை இந்த உப குழுக்களுக்கு காணப்படும் நிலைமையொன்று இந்த உள்ளடக்கத்தினால் உருவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | | |
| (vi) | பயிற்சி உப குழுவின் 08 அங்கத்தவர்களில் 07 அங்கத்தவர்கள் கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் ஆவர். இந்த உபக்குழுக்களின் உள்ளடக்கத்தினுள் 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனைத்து தனியார் | மேற்படி | தனியார் சுகாதார நிறுவனங்களின் உரிமையாளர்கள் உபகுழுக்களின் அங்கத்தவர்களான காரணத்தால் ஏற்படும் தொடர்பிலான முரண்பாடு (conflict of interest) ஏற்படாத வகையில் அந்த நியமனங்கள் மேற்கொள்ளப்படவேண்டியதுடன் அதிகார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் |

மருத்துவ நிறுவனங்களினாலும் பதவி அணியை ஆட்சேர்ப்பு செய்யும் போது ஆகக் குறைந்த தகமைகள் பின்பற்றப்படுகின்றமைக்கு சான்றுபடுத்துதல் மற்றும் பதவி அணி பயிற்சிக்கு ஆக குறைந்த நியமங்கள் பின்பற்றப்படுதல் தொடர்பில் பொறுப்புடன் செயல்படல் ஆகிய விடயங்கள் சான்றுபடுத்தப்படல் எதிர்பார்க்க இயலாது என்பது அவதானிக்கப்பட்டது. இந்த உப குழு கட்டமைப்பினுள் தனியார் மருத்துவ நிறுவனங்களின் ஆளணி பயிற்றுவிப்பிற்கு ஒழுங்குபடுத்தும் சபைக்கு அதிகார சட்டத்தின் மூலம் அதிகாரம் கிடைத்திராத போதிலும் தனியார் மருத்துவமனைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள தாதி உத்தியோகத்தர்களுக்காக Refresher Gap Filling Course எனும் பெயரில் பயிற்றுவிப்பு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்துவதற்கு 2019 ஆம் ஆண்டில் ரூபாய்.2,424,698 தொகையும் 2020 ஆம் ஆண்டில் ரூபாய்.540,484 தொகையும் ஒழுங்குபடுத்தும் சபையினால் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2022 ஜூன் 10 ஆம் திகதி நடாத்தப்பட்ட பயிற்சி உப குழு கூட்டத்திற்காக 08 அங்கத்தவர்களில் 03

வழிகாட்டல்களில் சுட்டி காண்பிக்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு புறம்பாக செயல்படக் கூடாது.

அங்கத்தவர்கள் மாத்திரம் பங்கு பற்றி இருந்ததுடன் அத்திகதி நடாத்தப்பட்ட உப குழு கூட்டத்தில் இவற்றுள் ஒரு அங்கத்தவர் பிரதிநிதித்துவப்படுத்தும் மருத்துவமனையும் உள்ளடங்களாக 04 மருத்துவமனைகளின் பொது பயிற்சி நிலையம் (Common Training Centers) 04 இனை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2022 அக்டோபர் 21 ஆம் திகதி மற்றும் 2023 பிப்ரவரி 03 ஆம் திகதி நடாத்தப்பட்ட பயிற்சி உப குழு கூட்டங்களிலும் இது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் இந்த உப குழு கூட்டங்களில் தனிப்பட்ட பயிற்சி நிலையங்களாக (Individual Training Centers) தெரிவு செய்வதற்கு உத்தேசிக்க பட்டிருந்த 03 மருத்துவமனைகளிடையே ஒரு மருத்துவமனை தொடர்பில் அதில் சேவை ஆற்றிய பெண் மருத்துவர் ஒருவரால் 2022 ஜுன் 22 ஆம் திகதி முறைப்பாடு ஒன்றை முன்வைத்து மருத்துவமனையின் பதவியணி தொடர்பிலும் (தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் வழிகாட்டி இலக்கம் 02 இன் பிரகாரம் முழு நேர அடிப்படையிலான மருத்துவ பணிப்பாளர் ஒருவர் இருக்க

வேண்டியபோதிலும்) அதன் 2014 முதல் முழு நேர மருத்துவ பணிப்பாளர் ஒருவர் சேவையில் ஈடுபடுக்க ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை குறிப்பிட்டு இருந்ததுடன் உரிய கடிதங்களை பரிசோதித்த போது இம் மருத்துவமனை தொடர்பில் தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டவாறு உள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (vii) | தனியார் மருத்துவமனைகளினால் கட்டணம் அறவீடு செய்யும் நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட முரண்பாடுகள் கிடைத்திருந்ததாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் இதற்கு உரியதாக நியமிக்கப்பட்டு இருந்த உப குழுவினால் சட்டப்பிரிவுடன் தொடர்புடைய பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இக்குழுவின் மொத்த அங்கத்தவர்கள் ஆன 09 பேரில் தனியார் மருத்துவமனைகள் மற்றும் பிணியாய்வு நிலையங்கள் சங்கத்தின் 04 பிரதிநிதிகள் உள்ளடங்களாக 07 அங்கத்தவர்கள் கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் ஆவர். இந்த உப குழு உள்ளடக்கத்தினுள் தனியார் | மேற்படி | கட்டுப்பாட்டு சபையில் உள்ள ஒவ்வொரு துறைகளுக்காகவும் நிபுணர்கள் உரிய உப குழுக்களுக்கு நியமிக்கப்பட வேண்டியதுடன் தனியார் சுகாதார நிறுவனங்களின் உரிமையாளர்கள் உபகுழு அங்கத்தவர்களான காரணத்தால் தொடர்பிலான முரண்பாடு (conflict of interest) ஏற்படாத வகையில் அந்நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

மருத்துவமனைகளினால் அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பில் கிடைக்கும் மக்கள் முறைப்பாடுகளுக்காக சுயாதீனமான மற்றும் நியாயமான தீர்மானங்கள் வழங்கப்படுவதாக எதிர்பார்க்க முடியாது என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கமைய தனியார் மருத்துவமனைகளினால் அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பில் ஒழுங்குறுத்துகை மேற்கொள்ளும் பிற்புலம் ஒன்று உருவாக்கப்பட்டிராத நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (viii) | முறைப்பாடுகளை விசாரிக்கும் உபகுழுவிற்கு 08 அங்குத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் தனியார் மருத்துவமனைகள் மற்றும் பிணியாய்வு நிலையங்கள் சங்கத்தின் 04 அங்கத்தவர்கள் உள்ளடங்களாக கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரால் நியமிக்கப்பட்ட 05 அங்கத்தவர்கள் இவ் உபகுழுவில் நியமிக்கப்பட்டிருந்தனர். தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரித்து பக்க சார்பின்றியும் மக்களின் நலனுக்கு தாக்கம் ஏற்படாத விதத்திலும் தீர்வுகளை வழங்குவதற்கு இந்த உப குழுவின் உள்ளடக்கம் தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தும் | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (ix) | ஒழுங்குபடுத்தும் சபையினால் நியமிக்கப்பட்ட 08 உப குழுக்களின் கூட்டங்களை நடத்துதல் ஒவ்வொரு ஆண்டிலும் வெவ்வேறு விதங்களில் இடம்பெற்றிருந்ததுடன் சில உப குழுக்கள் ஆண்டினுள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டு எண்ணிக்கையிலான சந்தர்ப்பங்களிலேயே கூடியிருந்தன. | மேற்படி | இது தொடர்பிலான ஏற்பாடுகளை உள்ளடக்கிய அதிகாரச் சட்டத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (x) | எந்தவொரு உபகுழு கூட்டத்திற்காகவும் ஆகக் குறைந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டிராததுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய உப குழு கூட்டங்களுக்கு பங்கு பற்றிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை உப குழுக்களின் ஒட்டுமொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் 50 சதவீதத்தினை விட குறைவான எண்ணிக்கை என்பது அவதானிக்கப்பட்டது. | மேற்படி | மேற்படி |
| (ஏ) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) அதிகாரச்சட்டத்தின் 18(2)(எ) பிரிவிற்கமைய “தொடர்புடைய அல்லது அதிருப்தி அடைந்த நபர் ஒருவரால் ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனம் ஒன்றுக்கு அல்லது அதனுடன் தொடர்புடைய நபர் ஒருவருக்கு எதிராக முன்வைக்கப்படும் ஏதேனும் ஒரு முறைப்பாட்டினை | | |

பெற்றுக்கொள்ளும் போது மற்றும் அந்த முறைப்பாட்டினை இறுதியாக அகற்றும்போது பின்பற்ற வேண்டிய செயல் நடைமுறைகள் அல்லது நடவடிக்கைகள்" தொடர்பில் இந்த அதிகார சட்டத்தின் 18(1) பிரிவின் பிரகாரம் அமைச்சரால் கட்டளை உருவாக்கப்படும் வகையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய அமைச்சரால் இந்த விடயங்கள் தொடர்பில் கட்டளைகள் தயாரிக்கப்பட வேண்டும் என சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குப்படுத்தும் சபையினால் PHSRC Guideline 05-Complain Handling Procedure எனும் பெயருடைய 2021 மார்ச் 19 ஆம் திகதி 02 பக்கங்களுடனான (12 விடயங்கள் உள்ளடக்கப்பட்ட) முறைப்பாடுகள் தொடர்பில் வழிகாட்டி ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபைக்கு இவ்விதத்தில் வழிகாட்டிகளை தயாரிப்பதற்கு கிடைத்துள்ள சட்ட ஏற்பாடு என்ன என்பது கணக்காயில் உறுதிப்படுத்தப்படாததுடன் இந்த வழிகாட்டிக்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றமை உறுதிப்படுத்தப்படவில்லை | அதிகாரத்தினால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் ஊடாக முறைப்பாட்டினை விசாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இது தொடர்பில் பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசரித்த பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | . அவ்வாறே அமைச்சரினால் இந்த வழிகாட்டியை கட்டளையொன்றாக வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அல்லது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | இவ்வாறு தயாரிக்கப்பட்ட வழிகாட்டினுள் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு ஒவ்வொரு தரப்பினராலும் எடுக்கக்கூடிய உச்சகால எல்லை தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு உரிய பால எல்லை குறிப்பிடப்பட வேண்டும். |
| (iii) | தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபைக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் தொடர்பிலான உப குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பில் நியமிக்கப்பட்டிருந்த உபகுழுவின் உள்ளடக்கம் மற்றும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் சிக்கல்கள் காணப்படுகின்றமையால் முறைப்பாடுகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்கின்றதா என்பது நிச்சயமற்றதாக காணப்பட்டது. | மேற்படி | சுயாதீனமான தீர்மானங்களை எடுக்க கூடிய விதத்தில் உள்ளடக்கத்துடனான முறைப்பாடுகளை விசாரிக்கும் உப குழு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் தரப்பினருக்கு முறைப்பாடு | மேற்படி | இது தொடர்பிலான ஏற்பாடுகள் வழிகாட்டியில் |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கும் மற்றும் அதன் பெறுபேறு / பின்தொடர்தல் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்பும் நடைமுறையொன்று அந்த வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த இணைய முறையின் ஊடான முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் நடைமுறை தொடர்பில் இந்த வழிகாட்டில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஐ) | ஒழுங்குபடுத்தும் சபைக்கு கடந்த வருடங்களில் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் தரவு கட்டமைப்பொன்று முறையாக பேணி செல்லப்பட்டிராதுடன் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு 2023 பிப்ரவரி 03 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கோரப்பட்டிருந்த முறைப்பாடுகள் தொடர்பிலான தகவல்களை வழங்குவதற்கு 06 வார கால பகுதியினை பெற்று தருமாறு 2023 பிப்ரவரி 15 ஆம் திகதி ஒழுங்குபடுத்தல் சபையினால் கோரிக்கை விடுத்திருந்தத்துடன் இந்த தகவல்கள் 2023 மே 04 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மேற்படி | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகார சட்டத்தின் 7 மற்றும் 42 (அ) பிரிவிற்கமைய கணக்காய்விற்கு கோரப்பட்ட தகவல்களை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | ஒழுங்குபடுத்தும் சபையினால் முறைப்பாடுகள் தொடர்பில் பதிவேடு ஒன்று பேணப்பட்டிராததுடன் இதனால் ஒரு வருடத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை, முறைப்பாடு கிடைத்த மூலம், முறைப்பாடு தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை போன்ற விபரங்களை தெளிவாக இனங்காணும் | மேற்படி | கிடைக்கும் அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு ஒன்று நாளதுவரையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையொன்று காணப்படவில்லை. | | |
| (ஓ) | தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பில் கிடைக்கும் பொது மக்களின் குறைபாடுகள்/ முறைப்பாடுகளை விசாரித்து / பரிசோதித்து / புலனாய்விற்கு உட்படுத்தி அதற்குரிய தீர்மானங்களை எடுப்பதற்கு 2017 - 2019 ஆம் ஆண்டுகளில் 08 அங்கத்தவர்களும் 2020, 2021 ஆம் ஆண்டுகளில் 7 அங்கத்தவர்களும் பிரதிநிதித்துவப்படுத்திய முறைப்பாடுகளை விசாரிக்கும் உபகுழு ஒன்று ஒழுங்குபடுத்தும் சபையினால் நிறுவப்பட்டிருந்தது. வருடம் முழுவதும் பல்வேறு தரப்பினரிடம் இருந்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் இது தொடர்பில் கலந்துரையாடி தீர்வினை வழங்குவதற்கு போதிய உபக்குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிராதத்துடன் 2017 முதல் 2023 ஜனவரி 27 வரையிலும் நடாத்தப்பட்டிருந்த மொத்த உபக்குழு கூட்டங்களின் எண்ணிக்கை 12 மாத்திரம் ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் 07 உப குழுக்களுக்காக அங்கத்தவர்களின் பங்குபற்றல் 50 சதவீதத்தினை விட குறைவாக காணப்பட்டது. அவ்வாறே நடாத்தப்பட்டிருந்த 12 கூட்ட தடவைகளில் 08 கூட்டங்களுக்கு பங்குபற்றிய எண்ணிக்கையில் ஒழுங்குபடுத்தும் சபையின் கட்டுப்பாட்டுச் சபைக்கு அமைச்சரால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களின் பங்குபற்றல் 50 சதவீதமும் அதனை விட அதிகமாகவும் காணப்பட்ட போதிலும் அந்த 12 கூட்டங்களில் 03 கூட்டங்களுக்கு மாத்திரம் சட்ட பிரதிநிதி பங்குபற்றி இருந்தமை | மேற்படி | கிடைக்கும் அனைத்து முறைப்பாடுகளையும் துரிதமாக விசாரிப்பதற்கான நடைமுறையொன்று தயாரிக்க தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | |
| (ஔ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஜனவரி 27 ஆம் திகதி வரையிலும் நடாத்தப்பட்ட 12 முறைப்பாடுகள் தொடர்பிலான உபகுழு கூட்டங்களில் தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பில் 80 சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் அவ்வப்போது கலந்துரையாடப்பட்டிருந்தன. இந்த 80 முறைப்பாடுகளிடையே தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் கட்டுப்பாட்டுச் சபையினை பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டின் 09 முன்னணி தனியார் மருத்துவமனைகள் தொடர்புபட்டு இருந்ததுடன் 43 முறைப்பாடுகள் அதாவது மொத்த முறைப்பாடுகளில் 54 சதவீதமாக காணப்பட்டதுடன் நாட்டில் ஏனைய தனியார் சுகாதார நிறுவனங்கள் தொடர்பில் கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 37 ஆக அதாவது மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 46 சதவீதம் ஆகும். இந்த முறைப்பாடுகள் இடையே நியாயமற்ற முறையில் கட்டணங்களை அறவிடல் மருத்துவ மற்றும் ஏனைய பதவியணி தொடர்பிலான சிக்கல்கள், சிகிச்சைகள் தொடர்பிலான பிரச்சினைகள், தொழில்சார் நெறிமுறைகள் தொடர்பிலான பிரச்சினைகள், நோயாளிகள் மரணமடைதல் தொடர்பிலான பிரச்சனைகள் போன்றே சிறுநீரக விற்பனை தொடர்பிலான பிரச்சனைகளும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | மேற்படி | கிடைக்கும் அனைத்து முறைப்பாடுகளையும் துரிதமாக விசாரித்து பாதிப்பிற்குள்ளான தரப்பினர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படாது இருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | கடந்த 03 வருட காலப்பகுதியினுள் தனியார் சுகாதார சேவை நிறுவனங்கள் தொடர்பில் பாவணையாளர் அலுவலகல் அதிகார சபைக்கு 39 முறைப்பாடுகள் | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்திருந்தது. இந்த 39 முறைப்பாடுகளில் 22 முறைப்பாடுகள் அதாவது 56 சதவீதம் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தனியார் மருத்துவமனைகள் ஆக காணப்பட்டமை முக்கியமான விடயமாக காணப்பட்டது. தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் கட்டுப்பாட்டு சபையை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் அங்கத்தவர்களாக செயல்படும் தனியார் மருத்துவமனைகள் மற்றும் பிணியாய்வு நிலையங்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு குறித்த மருத்துவமனைகள் தொடர்பில் இவ்வாறு பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்திருந்தமை மூலம் நாட்டில் ஏனைய தனியார் சுகாதார சேவை நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தல் பணியை மேற்கொள்வதற்கு கட்டுப்பாட்டு சபைக்கு முன்னுதாரணம் ஒன்றினை வழங்குவது கடினமானது என்பது கணக்காயில் அவதானிக்கப்பட்டது. | | |
| (கா) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) அதிகாரச்சட்டத்தின 18(2)(ஆ) பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட கட்டளையாக 2007 டிசம்பர் 04 ஆம் திகதிய 1526/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2007 இன் 02 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (கட்டணங்கள்) கட்டளைகள், அதிகாரச்சட்டத்தின் 18(4) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய பாராளுமன்றத்திற்கு | மேற்படி | வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகளில் நிலவும் குறைபாடுகளை திருத்தி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கான சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. அவ்வாறே இந்த கட்டளைகளானது அதிகாரச் சட்டத்தின் 18(2)(ஆ) ஆம் பிரிவின் கீழேயே உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இந்த கட்டளைகளை உருவாக்குவதற்கு அமைச்சருக்கு அதிகாரமானது அதிகாரச் சட்டத்தின் 18(2)(ஏ) பிரிவின் பிரகாரம் கிடைத்துள்ளமை அவதானிக்கப்பட்டது. 2007 இன் 02 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (கட்டணங்கள்) கட்டளைகளில் கட்டளை இலக்கம் (2) மற்றும் (3) இன் பிரகாரம் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான வகையில் மருத்துவத் துறையில் ஈடுபட்டுள்ள அல்லது மருத்துவ, அறுவை சிகிச்சை அல்லது பல் மருத்துவம் ஆகிய மருத்துவத்துறை சார் தொழில்களில் ஈடுபடும் ஏதேனும் ஒரு மருத்துவருக்கு, பல் மருத்துவருக்கு, வைத்திய நிபுணருக்கு அல்லது பொதுவான தொழிலில் ஈடுபட்டுள்ளவர் அல்லது சுகாதார பாதுகாப்பு சேவை வழங்கும் மற்றும் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களினாலும் அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பில் மேற்படி வர்த்தமானியில் குறிப்பிட்டப்பட்டுள்ள கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதும்

| | | | |
|---|---|---|---|
| | அந்நிறுவனங்கள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | | |
| (கி) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) அதிகாரச்சட்டத்தின் 3 பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 18 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரால் உருவாக்கப்பட்ட 2007 இன் 1 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) கட்டளை 2007 மார்ச் 22 ஆம் திகதிய 1489/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த போதிலும் அதிகார சட்டத்தின் 18(4) பிரிவுக்கமைய இந்த கட்டளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த 2007 இன் 1 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) கட்டளைகளின் 4 ஆம் இலக்க கட்டளைக்கமைய வெளியிடப்படும் பதிவுச் சான்றிதழும் ''இ'' பட்டோலையில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய காணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் குறித்த பட்டோலையானது ''அ'' என பெயரிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் இந்த ''இ'' பட்டோலையானது 2007 ஆகஸ்ட் 13 ஆம் திகதிய 1510/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு திருத்தங்களின் மூலம் திருத்தப்பட்டிருந்ததுடன் தனியார் மருத்துவ நிறுவனம் ஒன்றினை நடாத்திச் செல்வதற்கு பதிவு செய்த நபரினால் "விஞ்ஞான ரீதியாக மற்றும் மருத்துவ | மேற்படி | மேற்படி |

விஞ்ஞானத்திற்கு அமைவாக மிகவும் பொருத்தமான நிலைமைகள் மற்றும் சிறந்த தரத்துடனான ஏதேனும் பொருட்கள், சேவைகள் மற்றும் வசதிகளை வழங்க வேண்டியதுடன் பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவ ஆளணியினை கொண்ட பதவயணி ஒன்று பேணிச் செல்லப்பட வேண்டியதுடன் காலாவதியடையாத மருந்துகளை வழங்குதல் மூலம் அந்நிறுவனத்தின் சிறந்த தரம் பேணிச் செல்லப்படுதல் வேண்டும்." என குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டிகளில் ஒவ்வொரு தனியார் நிறுவனங்களினாலும் பேணிச்செல்லப்பட வெண்டிய பதவியணி தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இந்த வழிகாட்டிகளுக்கமைய விஞ்ஞான ரீதியான மற்றும் மருத்துவ விஞ்ஞானத்திற்கு அமைவான சிறந்த தரத்திலான மற்றும் பொருத்தமுடைய நிலைமையை கொண்ட பொருட்கள், சேவைகள் மற்றும் வசதிகள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் பயிற்றுவிக்கப்பட்ட ஆளணியினை கொண்ட பதவியணி ஒன்று பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை என்பதும் கடந்த வருடத்தில் கிடைக்கப்பெற்றிருந்த முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(கீ) தனியார் சுகாதார சேவைகள் நிறுவனங்கள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகத்தினால் புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தினை போன்றே சுகாதார அமைச்சின் அவசர சுற்றி வளைப்பு பிரிவினால் புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | சுகாதார அமைச்சின் அவசர சுற்றுவளைப்பு பிரிவின் புலனாய்வு நடவடிக்கைகளுக்கு அனுப்பும் போது குழு ஒன்று பங்குபெற்றுவதாக அந்த அறிக்கைகளில் பரீட்சித்தபோது அவதானிக்கப்பட்ட போதிலும் மேல் மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தினால் முறைப்பாடுகள் புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்கு உரிய மருத்துவர் மாத்திரம் பங்குபற்றி இருந்தமை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட அறிக்கைகளின் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டமையால் பக்க சார்பற்றதும் சரியானதுமான தீர்வு முறைபாட்டாளருக்கு வழங்கப்பட்டதா என்பது பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. | மேற்படி | முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு நடைமுறையொன்று தாபிக்கப்பட வேண்டியதுடன் சுயாதீனமானதும் வெளிப்படை தன்மையுடனும் செயல்படக்கூடிய குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். |
| (ii) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சில முறைப்பாட்டு அறிக்கைகளை பரிசோதித்த போது முறைப்பாடுகளை விசாரணை செய்த பின்னர் வழங்கப்பட்டிருந்த சில | மேற்படி | சுயாதீனமானதும் வெளிப்படை தன்மையுடனும் செயல்படக்கூடிய குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டியதுடன் துரிதமாக |

| | | | |
|---|---|---|---|
| | பரிந்துரைகள் பக்கச் சார்பு மற்றும் நியாயமற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே முறைப்பாடு ஒன்று கிடைத்த திகதியிலிருந்து அதனை புலனாய்வு செய்வதற்கு பாரிய கால தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | புலனாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (கு) | பதிவு செய்ய வேண்டிய திட்டவட்மான காலப்பகுதியொன்று அதிகாரச்சட்டத்தின் அல்லது முன்னோடி மதியுரையாளரினால் குறிப்பிடப்பட்டிராத காரணத்தால் மருத்துவ நிறுவனங்களின் பதிவிற்காக எந்த திகதியிலேனும் பணம் கிடைத்தவுடன் குறித்த வருடத்திற்காக பதிவுச் சான்றிதழை வழங்குதல் இடம்பெற்றிருந்ததுடன், தண்டப்பணம் அறவிடப்பட்டிராத காரணத்தால் ஆண்டின் ஆரம்பத்தில் சபைக்கு பெற்றுக்கொள்ள வேண்டிய வருமானம் தாமதமாக கிடைத்திருந்தது. | மேற்படி | தனியார் மருத்துவ நிறுவனங்கள் பதிவு செய்ய வேண்டிய திட்டவட்டமான காலப்பகுதியொன்று தீர்மானிக்கப்பட்டு அந்த காலப்பகுதியினுள் பதிவு செய்யாத நிறுவனங்களிலிருந்து தண்டப்பணமொன்றை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி கோவையின் 4.4 ஆம் பந்திக்கமைய உள்ளக கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட வேண்டியதுடன் ஒழுங்குபடுத்தும் சபை அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றமை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்மைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.2 கணக்காய்வுக் குழுக் கூட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஜனவரி 12 ஆம் திகதிய டிஎம்ஏ/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கைக்கமைய காலாண்டு ஒன்றிற்கு 01 படி வருடமொன்றிற்கு கணக்காய்வு மற்றும் முகாமித்துவ குழு கூட்டங்கள் ஆகக் குறைந்தது 04 நடாத்தப்பட வேண்டிய போதிலும் ஒழுங்குபடுத்தும் சபையினால் மீளாய்வாண்டின் போது எந்த ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டமும் நடத்தப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமை கடந்த 03 வருடங்களிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர்கள் அது தொடர்பில் கவனம் செலுத்தி இருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றமை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு ‘‘2030 இன் நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக ஒழுங்குபடுத்தும் சபையினால் அறிந்திருக்காமையின் காரணமாக தமது விடயப்பரப்பிற்கு கீழ் வருகின்ற பணிகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய கட்டங்களும் இலக்கினை அடைந்து | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றமை. | உரிய சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு ‘‘2030’’ இன் நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக ஒழுங்குபடுத்தும் சபைக்கு அறிவித்து தமது விடயப் பரப்பின் கீழ் வருகின்ற பணிகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள |

கொள்ளப்படுவதை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமை கடந்த 03 வருடங்களாக சுட்டிக்காண்பிக்கப்பட்ட போதிலும், அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

வேண்டிய கட்டங்களும் இலக்குகளின் அடிப்படையில் அடைதலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.